வணிகவரி மற்றும் அறநிலையத் துறை

மானியக் கோரிக்கை எண் 4

# தமிழ்நாடு பொது விற்பனை வரிகள் ஏனைய வரிகள், தீர்வைகள் நிருவாகம்

## 1996 - 97

©
தமிழ்நாடு அரசு
1996

கோரிக்கை எண் 4

# தமிழ்நாடு பொது விற்பனை வரிகள், ஏனைய வரிகள், தீர்வைகள் நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு

## முன்னுரை

வணிகவரித் துறை, மிக அதிக அளவு வருவாய் ஈட்டித்தரும் மாநில அரசுத் துறையாகும். 1995-96 ஆம் ஆண்டில் இத்துறையினால் வசூலிக்கப்பட்ட மொத்த வருவாய் ரூபாய் 5023 கோடியாகும். இது மாநிலத்தின் மொத்த வரி வருவாயில் 70 விழுக்காடாகும். இத்துறை சிறப்பு ஆணையர் மற்றும் வணிகவரி ஆணையரின் தலைமையில் இயங்குகிறது.

109/9-1

2. வணிகவரித்துறை பின்வரும் வரிவிதிப்புச் சட்டங்களை நிர்வகித்து வருகிறது.

* தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனைவரிச் சட்டம்
* தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனைவரிச் சட்டம்
* தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு விற்பனை வரி மேல்வரிச் சட்டம்
* 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம்
* தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டம்
* தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதிச் சட்டம்
* தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு குதிரைப் பந்தய வரிச் சட்டம்
* தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு ஒட்டல்கள் மற்றும் தங்கும் விடுதிகளின் ஆடம்பர வசதிகள் மீதான வரிச் சட்டம்
* தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்டம்
* தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு உள்ளாட்சிப் பகுதிகளுக்குள் மோட்டார் வாகனங்கள் நுழைவின் மீதான வரிச் சட்டம்.

3. இத்துறையில் நிர்வகிக்கப்படும் பல்வேறு சட்டங்களின் கீழ் ஆண்டு வாரியாக வசூலிக்கப்பட்ட மொத்த வரிவருவாய் பின்வருமாறு :–

( 3 ஆம் பக்கம் காண்க )



## வரி வருவாய்

(ரூபாய் கோடியில்)

| சிறு தலைப்புகள் | 1990–91 | 1991–92 | 1992–93 | 1993–94 | 1994–95 | 1995–96 |
|---|---|---|---|---|---|---|
| பொது விற்பனை வரிச் சட்டத்தில் விற்பனை வரி | 1322 | 1570 | 1843 | 2112 | 2507 | 2967 |
| கூடுதல் விற்பனை வரி | 297 | 340 | 381 | 443 | 553 | 681 |
| விற்பனை வரி மேல்வரி | 135 | 182 | 230 | 263 | 330 | 395 |
| கூடுதல் மேல்வரி | 25 | 27 | .. | .. | 47 | 56 |
| பிற | ... | 11 | 51 | .. | 16 | 20 |
| பொது விற்பனை வரி (உட் கூடுதல்) | 1779 | 2130 | 2505 | 2818 | 3453 | 4119 |
| மத்திய விற்பனை வரி | 276 | 330 | 362 | 393 | 477 | 590 |
| கேளிக்கை வரி | 70 | 69 | 76 | 82 | 88 | 99 |
| பந்தய வரி | 5 | 5 | 5 | 6 | 5 | 6 |
| சொகுசு வரி | 17 | 17 | 22 | 28 | 36 | 51 |
| நுழைவு வரி | 20 | 25 | 42 | 70 | 105 | 158 |
| மொத்த வரி வருவாய் | 2167 | 2576 | 3012 | 3397 | 4164 | 5023 |

## முக்கிய கொள்கை மாற்றங்கள்

4. தமிழ் நாட்டின் தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் தூய்மையான மற்றும் திறமையான நிர்வாகம் அமைய வேண்டும் என்ற இந்த அரசின் கொள்கையைக் கருத்திற்கொண்டு 1996–97ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ள தொலைநோக்கு வரி விதிப்புக் கொள்கையின் காரணமாக 1996–97 ஆம் ஆண்டு வணிக வரித் துறைக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டாகத் திகழ்கிறது. இந்தக் கொள்கையின் முக்கிய நோக்கங்களாவன :

* வரி விதிப்பில் பெரிதும் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்தும் நோக்குடன் வரிவீதம் மற்றும் படிமுறைகளின் (Slabs) கட்டமைப்பைச் சீரமைத்தல், வரி விதிப்பு மற்றும் வசூலினை எளிமையாக்குதல்.

* புதிய, ~~அதி நவீன~~ வரிவிதிப்பு நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல்.

* மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதுடன் உள்ளூர் கொள்முதல் மற்றும் உற்பத்தி வாய்ப்புகளை மேம்படுத்துதல்.

* மிக அதிக எண்ணிக்கையிலான சிறு வணிகர்களுக்கு வரி விலக்கு, இணக்க வரி முறை மற்றும் சுயவரி விதிப்பு முறைகளின் வாயிலாக நிவாரணம் வழங்குதல்.

* மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருட்களுக்கு வரிப் பளுவினைக் குறைத்தல்.

## பொது விற்பனை வரிக் கட்டமைப்பில் முக்கிய மாற்றங்கள்

5. மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொலைநோக்கு வரிவிதிப்புக் கொள்கையின் நோக்கங்களைக் கருத்திற் கொண்டு, தமிழ்நாடு பொது விற்பனை வரி வீதம்



மற்றும் படிமுறைகளைச் சீரமைத்திட பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### ஒருமுனை வரி விதிப்பு

6. அரசின் கொள்கையைக் கருத்திற் கொண்டு அண்மைக்காலம் வரை ஆறாவது அட்டவணையிலிருந்த (முதல் மற்றும் இரண்டாம் முனை வரிவிதிப்புக்குட்பட்டிருந்த) மதுபானம் தவிர அனைத்துப் பொருட்களும் முதல் அட்டவணைக்குக் கொண்டுவரப்பட்டு ஒருமுனை வரி விதிப்பிற்கு மாற்றப்பட்டுள்ளன.

### பல்வேறு வரிவிகிதங்களை ஒருங்கிணைத்தல்

7. பொருள்களின் விற்பனை / கொள்முதல் மீது இதுவரை பின்வரும் வரிகள் விதிக்கப்பட்டு வந்தன.

அ) அடிப்படை விற்பனை வரி.

ஆ) விற்பனை வரிமீது மேல்வரி – இதுவரை விற்பனை வரியில் 15 % ஆக விதிக்கப்பட்டு வந்தது.

இ) கூடுதல் மேல் வரி – இதுவரை விற்பனைவரியில் 5% ஆக விதிக்கப்பட்டு வந்தது.

ஈ) கூடுதல் விற்பனை வரி – இதுவரை ரூ.10 இலட்சத்திற்கு மேல் வரிவிதிப்புக்குட்பட்ட விற்பனையளவுள்ள வரிவிதிப்புக்குரியவர்கள் மீது மொத்த விற்பனையளவில் 1.5% முதல் 3% வரை படிப்படியான அளவில் விதிக்கப்பட்டு வந்தது.

8. தற்போதைய சீரமைப்பு முன்மொழிவுகள் கீழ்க்கண்ட வகையில் வரிவிதிப்பை எளிமையாக்கிடும் :–

i) மாநிலம் முழுவதும் எல்லாப் பொருட்களுக்கும், ஏறத்தாழ 1.5 இலட்சம் வரிவிதிப்புக்குரியவர்களுக்கு சலுகைப் பலனளிக்கும் வகையில் அனைத்துப்பொருட்களின் மீதும் மேல் வரி மற்றும் கூடுதல் மேல் வரி 17.7.1996 முதல் அறவே நீக்கப்பட்டுள்ளன.

ii) கூடுதல் விற்பனைவரி விதிப்பிற்கான வரிவிதிப்பு –விற்பனையளவை ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.100 கோடியாக உயர்த்தியதின் மூலம், தற்போது கூடுதல் விற்பனை வரி விதிப்புக்குட்படும் 70,000 பேர்களில் 99 சதவீதத்தினர்க்கும் மேற்பட்டவர்களுக்குக் கூடுதல் விற்பனை வரி நீக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.100 கோடி வரை வரிக்குட்படும் விற்பனை அளவு உள்ளவர்கள் சூலை 96 முடிய மட்டுமே பழைய வீதங்களில் கூடுதல் விற்பனை வரி செலுத்த வேண்டும்.

வரவு–செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்திற்கு பதிலளிக்கப்பட்டபோது முகவர்களின் விற்பனைத் தொகையை ஒருங்கிணைத்து, அவர்களின் முதன்மை நிறுவனத்தின் மீது, கூடுதல் விற்பனை வரி விதிப்பது தொடர்பாக ஆராயப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்கான சட்டத் திருத்தம் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதற்கிடையே தமிழகத்திற்கு வெளியே தலைமையகத்தைக் கொண்டுள்ள நிறுவனங்களின் கிளைகள் அல்லது முகவர்களுக்கு கூடுதல் விற்பனை வரி விதிப்பிற்கான உயர்த்தப்பட்ட உச்ச வரம்பு, பொருந்தாது. முன்பிருந்த நிலையே நீடிக்கும்.

iii) மேல்வரி, கூடுதல் மேல்வரி அறவே நீக்கப்பட்டு, கூடுதல் விற்பனை வரி விதிப்பிற்கான விற்பனையளவில் குறிப்பிட்ட அளவுக்கு மாற்றம் செய்ததின் காரணமாக அடிப்படை வரிவிகிதங்களில் மாற்றம் செய்ய வேண்டியுள்ளது. பழைய அடிப்படை வரிகளோடு ஒப்பிட்டு ஒட்டுமொத்த புதுவரி விகிதங்கள் பின்வரும் அட்டவணையில் அளிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக பழைய அடிப்படை வரி விகிதம் 3 சதவீதமானாலும், மேல்வரி, கூடுதல் மேல் வரி, கூடுதல்



விற்பனை வரி ஆகியவற்றைச் சேர்த்து ஒட்டுமொத்த வரிவிகிதம் 5.6 சதவீதமாக அமைகிறது. அது தற்போது 4 சதவீதமாக்கப் பட்டுள்ளது. பிறவரிவிகிதங்களும் அவ்வாறே அமைகின்றன.

| தற்போதைய வரிவிகிதம் சதவீதத்தில் | மேல்வரி, கூடுதல் மேல்வரி மற்றும் கூடுதல் விற்பனை வரி ஆகியவை உள்ளிட்ட ஒட்டுமொத்த வரி விகிதம் சதவீதத்தில் | புதிய வரி விகிதம் சதவீதத்தில் |
|---|---|---|
| 1 | 3 | 2 |
| 3 | 5.6 | 4 |
| 5 | 8 | 8 |
| 8 | 11.6 | 12* |
| 12 | 16.4 | 16 |
| 16 | 21.2 | 20 |

* நிதி நிலை அறிக்கை விவாதத்திற்குப் பதில் அளித்தபோது 12 சதவீதத்தை 11 ஆக 17.7.96 முதலே குறைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சீர் திருத்தி அமைப்பதில், வரி விலக்கு அளித்தல் அல்லது குறைந்த படிமுறை வரி வீதத்தில் கொண்டு வருதல் மூலமாக அன்றாடம் பயன்படுத்தப்படும் பொருட்களைக் கவனத்தில் கொண்டு நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது.

## புதிய வரி விதிப்பு முறைகள் மற்றும் தொழில் வளர்ச்சிக்கு ஊக்குவிப்பு

9. சிறந்த புதிய வரிமுறைகளை அறிமுகப்படுத்துவதன் அவசியத்தின் தொடர்பாக, மாநில அரசு மற்றும் வரி நிபுணர்களுக்கிடையே கருத்துப்

பரிமாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இதன் அடிப்படையில் மதிப்புக் கூட்டுவரி (Value Added Tax) அறிமுகப்படுத்த வேண்டும் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முனைவர் ராஜா செல்லையா தலைமையிலான குழு இப்பொருள் குறித்து 1994ஆம் ஆண்டு அறிக்கை கொடுத்துள்ளது. அவ்வறிக்கை பல்வேறு மாநிலங்களின் நிதியமைச்சர்களைக் கொண்ட குழுவினால் ஆய்ந்து விவாதிக்கப்பட்டது. அக்குழுவில் தமிழ்நாடும் அங்கம் வகித்தது. அக்குழு பின்வருமாறு பரிந்துரைத்துள்ளது.

அ) வரிக் கட்டமைப்பைச் சீரமைத்தல் மற்றும் எளிமைப்படுத்துதல்

ஆ) மாநிலங்களுக்கிடையே இணக்கமான வரி வீதங்களை உருவாக்குதல்

இ) மதிப்புக் கூட்டுவரி முறையை படிப்படியாக அறிமுகப்படுத்துதல்

மேற்சொன்ன வழிமுறைகளைக் கருத்திற் கொண்டு பின்வருமாறு ஒட்டுமொத்த நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன:–

அ) தொழிற்சாலைகளுக்கான மூலப் பொருட்கள்

**10. இதுவரை சட்டத்தின் பிரிவு 3(3)ன் கீழ் மூலப் பொருட்கள் கொள்முதல் செய்வதில் சலுகை வரி வீதம் அனுபவித்து வரும் தொழிற்சாலைகள் ஒட்டுமொத்த வரி 5.6 சதவீதம் செலுத்தி வந்தன. இது 3 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.**

**ஆ) முதலீட்டுப் பொருட்கள் கொள்முதலில் சலுகைகள்**

11. மூலப் பொருட்களுக்கான 3 சதவீத சலுகை வரிவிகிதம் முதலீட்டுப் பொருட்களுக்கு இதுவரை இல்லை. இந்த நிதிநிலை அறிக்கையில் பல்வேறு எந்திரங்கள், விசை பம்புகள், பவர் ஃபாக்டர்ஸ் (Power factors) மற்றும் ஷண்ட் கப்பாசிட்டர்ஸ் (Shunt capacitors), ஆயில் என்ஜின்கள், எரிஉலை மற்றும் கொதிகலன்கள், ஜெனரேட்டர்செட் மற்றும் தொடர்புடைய உட்பொருட்கள் மற்றும் உதிரிப் பாகங்களுக்கு தற்போது நீட்டிக்கப்பட்டுள்ளது.



இ) மின் உற்பத்திக்கான முதலீட்டுப் பொருட்கள்

12. அரசால் அங்கீகரிக்கப்பட்ட மின் உற்பத்தித் திட்டங்களுக்கு மின் உற்பத்திக்காக, மாநிலத்துக்குள் வாங்கப்படும் முதலீட்டுப் பொருட்களுக்குச் சலுகை 12 சதவீதமாக இருந்த வரிவிகிதம் 3 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

ஈ) 100 % ஏற்றுமதி அலகுகள்

13. 100 % ஏற்றுமதி அலகுகள் மற்றும் சென்னை ஏற்றுமதி மண்டலத்தில் அமைக்கப்பட்டுள்ள அலகுகள் (MEPZ) மாநிலத்திற்குள் வாங்கும் அனைத்து மூலப் பொருட்களுக்கும் விற்பனை வரிவிதிப்பிலிருந்து முற்றிலும் விலக்களிக்கப்பட்டுள்ளது.

உ) கரும்பின் மீது கொள்முதல் வரி

14. கரும்பின் மீது இதுவரை 11 சதவீதமாக இருந்த அடிப்படை வரிவிகிதம் பிற வரிகளோடு சேர்ந்து 14.7 சதவீதமாக இருந்தது. அது சர்க்கரைத் தொழிலுக்கு ஊக்கமளிக்கும் வகையில் 8 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

ஊ) மதிப்புக் கூட்டு வரி

15. தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மதிப்புக் கூட்டுவரி, (VAT)முதற்கட்டமாக ரூ. 75 இலட்சத்திற்கு மேல் விற்பனையளவு கொண்டவர்கள் மறுவிற்பனை கட்டத்தில் செய்யும் மதிப்புயர்வின்மீது விதிக்கப்படும். இவ்வரிவிதிப்பு 1.10.96 முதல் நடைமுறைக்கு வரும்.

## சிறு வணிகர்களுக்கான சலுகைகள்

16. இதுவரை வரிதிப்பு அலுவலர்களின் விரிவான கணக்கு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் அதிக எண்ணிக்கையிலான சிறு வணிகர்களின் இடர்நீக்க சீரமைப்பு நடவடிக்கைகள் செய்யப்பட்டுள்ளன. முன்பிருந்த நடைமுறைப்படி பொருள் வாரியாகக் கணக்கு பராமரிக்கப்படவேண்டும். மேலும்



107/9-2.

அது சிக்கலான வரிவிதிப்பு நடைமுறைகளைக் கொண்டது. பின்வரும் சீர்திருத்தங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அ) வரிவிலக்கு வரம்பு அதிகரிப்பு

17. வரிவிதிப்பு வரம்புக்குள் வர இதுவரை விற்பனையளவு ரூ. ஒரு இலட்சம் ஆகும். இது ரூ. 3 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் 40,000 க்கும் அதிகமானவர்கள் பயனடைவர்.

ஆ) இணக்க வரி விதிப்பு முறை (**Compounding System**)

18. ரூ. 3 இலட்சத்துக்கு மேல் ரூ.10 இலட்சத்துக்கு மேற்படாத விற்பனையளவுள்ள வரி விதிப்புக்குரியவர்களுக்கு வரி செலுத்துவதற்கு இணக்க வரிவிதிப்பு முறை பின்வருமாறு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ரூ.3 இலட்சம் மற்றும் அதற்கு மேல்; ரூ.5 இலட்சத்திற்கு உட்பட்டவர்கள் | : மொத்தவிற்பனைத் தொகையில் 3% |
| ரூ. 5 இலட்சம் மற்றும் அதற்கு மேல் ரூ.10 இலட்சத்திற்கு உட்பட்டவர்கள் | : ரூ.15000 மற்றும் ரூ.5 இலட்சத்திற்கு மேற்பட்ட விற்பனைத் தொகையில் 5% |

அவ்வாறான வரி விதிப்புக்குட்பட்டவர்கள் மொத்த விற்பனை அளவிற்குக் கணக்குகளைப் பராமரித்தால் போதுமானது. விரிவான கணக்குகள் பராமரிக்கத் தேவையில்லை. இந்த முறையானது, வரிவிதிப்பிற்குரியவர்களின் விருப்பத்தின்பாற்பட்டது. அவ்வாறு இந்த முறைக்கு வர விருப்பம் தெரிவிக்கும் வரி விதிப்பிற்குரியவர்கள் பொருள்வாரியாக விரிவான கணக்குகளை வைத்திருக்க வேண்டியதில்லை. பட்டியல்கள், கொள்முதல், விற்பனை, இருப்பு இவற்றிற்கான கணக்கை மட்டும் பராமரித்தால் போதுமானது. அந்த வரி விதிப்பிற்குரியவர்கள், வரியைச் சேர்த்து வாங்கும்போது, அவ்வரி அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வரி வீதத்திலேயே அமைய வேண்டும். இணக்க வரிவிதிப்பு முறையில் செலுத்த வேண்டிய வரித் தொகையைவிட, வசூலிக்கப்பட்ட வரித்தொகை கூடுதலாக இருப்பின்,



அத்தொகையை அரசிற்கு செலுத்த வேண்டும். இணக்க வரி விதிப்பு முறை, வரி விதித்தல் மற்றும் வரி செலுத்தும் முறைகளை எளிமைப்படுத்தவே கொண்டுவரப்பட்டுள்ளது. இது தொடர்பான விவரங்கள் திருத்தப்படவுள்ள சட்டத்தில் வெளியிடப்பட உள்ளன.

இ) சுயவரி மதிப்பீடு ( Self Assessment )

19. சுயவரி மதிப்பீட்டு முறை இதுவரை ரூ. 5 இலட்சத்திற்குள் விற்பனையளவுள்ள வரி விதிப்புக்குரியவர்களுக்கே உள்ளது. இந்த வரம்பு ரூ. 10 இலட்சம் விற்பனையளவுள்ள வணிகர்களையும் தொழிற்சாலைகளையும், உள்ளடக்கும் வகையில் ரூ. 10 இலட்சமாக உயர்த்தப்படுகிறது. இத்திட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான வரி விதிப்பாளர்கள் பயன் பெறும்வகையில் ஏற்கெனவே உள்ள நிபந்தனைகள் எளிமைப்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் ஆண்டுக்கு 25 சதவீதம் வரி விதிப்புக்குரியவர்களே விரிவான கணக்காய்வுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். வணிகவரி ஆணையரால் கணிப்பொறியைப் பயன்படுத்தி அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தேர்வு செய்யப்படும். இத்தேர்வில் உள்ளூர் வணிகவரி அலுவலர்களுக்குத் தம் சொந்த விருப்புரிமை இல்லை. மீதமுள்ள 75 சதவீத வரிவிதிப்புக்குரியவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தாக்கல் செய்த கணக்கின்படி வரி விதிப்பு செய்யப்படும். இம்முறையின்கீழ் 70,000 க்கும் மேற்பட்ட வரிவிதிப்புக்குரியவர்கள் பயனடைவர். மற்றும் சிறு வணிகர்கள் எதிர்நோக்கிவந்த பல இடர்கள் நீக்கப்படும். இம்முறைக்குக் கிடைக்கும் வரவேற்பைப் பொருத்து வரம்பை மேலும் உயர்த்துவது குறித்து ஆய்வு செய்யப்படும்.

## பதிவு செய்தல்

20. ஒவ்வொரு ஆண்டும், பதிவினைப் புதுப்பித்துக் கொள்வது மிகவும் கடினமாக உள்ளது என்று வணிகர்கள் அரசுக்கு முறையீடு செய்துள்ளனர். அவர்களின் கோரிக்கையை அரசு பரிசீலித்து, ரூ.1000 செலுத்தி, 5 ஆண்டு காலத்திற்கு பதிவு செய்து கொள்ள அனுமதிக்க முடிவு செய்துள்ளது. ஆண்டுக்கு

ஒரு முறை பதிவினைப் புதுப்பித்துக் கொள்ளும் முறையும், வணிகர்கள் விருப்பத்தின் பேரில் தொடரும். ஒராண்டுக்கான பதிவுக் கட்டணம் ரூ.200 ஆகும்.

## மேலும் சலுகைகள்

21. ஏழைக் குடும்பங்களுக்குச் சலுகை காட்டும் வகையில் அன்றாடம் பயன்படுத்தப்படும் பின்வரும் பொருட்களுக்கு வரியிலிருந்து முழு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

1) பயறு, பருப்பு வகை – கடலைப்பருப்பு, துவரம்பருப்பு, பயத்தம்பருப்பு, மசூர்பருப்பு, உளுத்தம்பருப்பு, நரிப்பயறு, கேசரிப்பருப்பு.
2) மிளகாய்
3) புளி
4) தனியா
5) மஞ்சள்
6) மிளகு
7) வெல்லம்
8) பெருங்காயம்
9) சீரகம்
10) சீயக்காய்
11) பனங்கற்கண்டு

இவை தவிர பின்வரும் பொருட்களுக்கு முழு வரி விலக்கு அளிக்கபட்டுள்ளது.

1) கையினால் செய்யப்படும் தீப்பெட்டிகள்
2) தேங்காய் மட்டை
3) நெல் உமி மற்றும் குருணை
4) அலுமினிய வீட்டு உபயோகப் பாத்திரங்கள்
5) வெள்ளி மெட்டி, கொலுசு, அரைஞாண் கயிறு



22. குறைந்த படிமுறைகளுக்குக் கொணர்வதன் மூலம் பின்வரும் பொருட்களுக்கு வரிச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது:

*11 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டவை :–*

கம்ப்யூட்டர்கள், அதன் உதிரிப் பாகங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், அதன் உதிரிப் பாகங்கள், பொரிகடலை, பட்டாணி, பட்டாணிக்கடலை, புகைப்படத் தொழிலில் பயன்படுத்தப்படும் சுருள், தாள் மற்றும் இரசாயனங்கள்.

*1 1 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகக் குறைக்கப்பட்டவை :–*

சமையல் எரி வாயு, எலக்ட்ரானிக் கேஷ் ரிஜிஸ்டர், கணக்கிடும் மற்றும் பட்டியலிடும் பொறிகள், எலக்ட்ரானிக் கருவிகள் மற்றும் எலக்ட்ரானிக் பொருட்கள், எலக்ட்ரானிக் கால்குலேட்டர்கள், வோல்டேஜ் ஸ்டெபிலைசர்கள், மரம், எலெக்ட்ரிக் பம்பு, செருப்பு (காலணிகள்), பாக்கு, சீவல் உள்ளிட்ட வாசனைப் பாக்கு, பிரஷ்ஷர் குக்கர், உலர் பாட்டரிகள், உலர் செல்கள், இங்க், மின்விசிறி, மின்சார பல்புகள், டியூப் லைட்டுகள், பிட்டிங்ஸ், சோக் மற்றும் ஸ்டார்ட்டர்கள், நீர் வழங்குவதற்குப் பயன்படும் குழாய் போன்ற சாதனங்கள், காமிரா, என்லார்ஜர் மற்றும் இலென்சுகள், பித்தளை, செம்புப் பாத்திரங்கள், ஆடியோ காசட்டுகள், அலுமினியப் பொருட்கள்.

*8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்பட்டவை :–*

வணிகக்குறியிடப்படாத வெண்ணெய், நெய், பிஸ்கட், மிட்டாய் மற்றும் சாக்லெட்டுகள், எழுதுகிற காகிதம், அச்சடிக்கத் தேவைப்படும் காகிதம், கம்ப்யூட்டருக்கு உபயோகப்படும் காகிதம், பால் கொண்டு செல்ல பயன்படுத்தும் பிளாஸ்டிக் பைகள் மற்றும் ஆயத்த (Ready made) ஆடைகள்.

*4 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகக் குறைக்கப்பட்டவை :-*

பருப்பு வகைகளிலிருந்து தயாரிக்கப்படும் மாவுவகைகள்.

## துறையின் அமைப்பு

23. வணிகவரித் துறை நான்கு பிரிவுகளாகச் செயல்பட்டுவருகிறது:-

* வரி மதிப்பீட்டுப் பிரிவு
* மேல் முறையீட்டுப் பிரிவு
* செயலாக்கப் பிரிவு
* தணிக்கைப் பிரிவு.

### வரி மதிப்பீட்டுப் பிரிவு

இம்மாநிலம் ஒன்பது வணிகவரி கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வணிகவரி கோட்டமும் ஒரு வணிகவரி துணை ஆணையரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இக்கோட்டம், வணிகவரி மாவட்டங்கள் அல்லது வணிகவரி சரகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தற்போது 40 வணிகவரி மாவட்டங்கள்/சரகங்கள் உள்ளன. ஒவ்வொரு வணிகவரி மாவட்டமும்/சரகமும் ஒரு வணிகவரி உதவி ஆணையரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது.

வணிகவரி மாவட்டம்/சரகம் பல வரிவிதிப்பு வட்டங்களைக் கொண்டது. இம்மாநிலத்தில் 317 வரிவிதிப்பு வட்டங்கள் உள்ளன. இவற்றுள் 'மத்திய வரி விதிப்பு வட்டங்கள்' என அழைக்கப்படும் 6 வரிவிதிப்பு வட்டங்கள் (சென்னையில் 4 மற்றும் கோயம்புத்தூரில் 2 ) வணிகவரி உதவி ஆணையர்கள் தலைமையின் கீழ் இயங்குகின்றன; 226 வட்டங்கள் வணிகவரி அலுவலர்கள் தலைமையிலும், மீதமுள்ள 85 வட்டங்கள் துணை வணிகவரி அலுவலர்கள் தலைமையிலும் இயங்குகின்றன.



நிர்வாக மேம்பாட்டினையும் வணிகர் நலனையும் கருத்திற் கொண்டு பெரிய வரிவிதிப்பு வட்டங்களைப் பிரித்து சில புதிய வரி விதிப்பு வட்டங்களைத் தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அரசின் நிதி நிலையினைக் கருத்திற்கொண்டு இவ்வாண்டில் சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரைக் கோட்டங்களில் 5 பெரிய வரிவிதிப்பு வட்டங்களைப் பிரித்து மேலும் 3 புதிய வரிவிதிப்பு வட்டங்கள் தோற்றுவிக்கப்படும். அத்துடன் சேலம் மற்றும் கோயம்புத்தூர் கோட்டங்களில் துணை வணிகவரி அலுவலர் தலைமையில் உள்ள 2 வரிவிதிப்பு வட்டங்கள் வணிகவரி அலுவலர் நிலைக்கு உயர்த்தப்படும். மூன்று வரிவிதிப்பு வட்டங்களில் தற்போது உள்ள அலுவலகங்களின் வேலைப்பளுவைக் குறைக்க புதிதாக 2 வணிகவரி அலுவலர்கள், ஒரு உதவி வணிகவரி அலுவலர் மற்றும் மூன்று இளநிலை உதவியாளர்கள் பதவிகள் வழங்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக இந்த ஆண்டு ரூ.21.05 இலட்சம் உத்தேசமாக செலவாகும்.

இவைகளைத் தவிர அலுவலர்களின் நிர்வாகத்திறனை மேம்படுத்தவும், அலுவலகங்களின் செயல்பாட்டிற்கு உதவவும் 4 துணை ஆணையர்களுக்கு நேரடித் தொலைபேசி வசதியும் பல அலுவலகங்களுக்கு அலுவலகத் தளவாடங்களும் நகல் எடுக்கும் கருவிகளும் வழங்க ரூ.11.35 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### மேல் முறையீட்டுப் பிரிவு

மேல் முறையீட்டுப் பிரிவைப் பொறுத்த வரையில், விற்பனை வரி மேல்முறையீட்டு நடுவர் மன்றத் தலைவரின் ஒட்டுமொத்த கண்காணிப்பின் கீழ் 20 மேல்முறையீட்டு உதவி ஆணையர்களும், 2 மேல் முறையீட்டு துணை ஆணையர்களும் பணியாற்றி வருகிறார்கள். அவர்களின் பணி முன்னேற்றத்தை மேல் முறையீட்டு நடுவர்மன்றத் தலைவர் ஆய்வு செய்கிறார். நிர்வாகக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் மேல் முறையீடுகளைத் தீர்வு செய்வது தொடர்பான பணி முன்னேற்றம் குறித்து அரசும் ஆய்வு செய்து வருகிறது.

மேல் முறையீட்டுத் துணை ஆணையர்கள் சென்னை மற்றும் கோவையில் உள்ள மத்திய வரிவிதிப்பு வட்ட உதவி ஆணையர்களின் வரிவிதிப்பு ஆணைகளின் மீதான மேல் முறையீடுகளை விசாரித்து முடிவு செய்வார்கள். மேல் முறையீட்டு உதவி ஆணையர்கள், வணிகவரி அலுவலர்கள், துணை வணிக வரி அலுவலர்கள் மற்றும் உதவி வணிகவரி அலுவலர்கள் , வரிவிதிப்பு ஆணை மீதான மேல் முறையீடுகளை விசாரித்து முடிவு செய்வார்கள்.

செயலாக்கப் பிரிவு

இந்த மாநிலத்தில் 6 செயலாக்கக் கோட்டங்கள் உள்ளன. சென்னை–1 செயலாக்கக் கோட்டம் வணிகவரி இணை ஆணையரின் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகிறது. பிற கோட்டங்கள், அதாவது சென்னை–2 , மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள செயலாக்கக் கோட்டங்கள் துணை ஆணையர்கள் தலைமையில் செயல்பட்டு வருகின்றன. தற்போதைய கோயம்புத்தூர் செயலாக்கக் கோட்டம் மிகப் பெரியதாக உள்ளதால், நிர்வாக வசதிக்காக இரண்டாக பிரித்து சேலத்தை தலைமையகமாகக் கொண்டு புதிய கோட்டம் ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. சோதனைச் சாவடிகளும் இணை / துணை ஆணையர்கள் (செயலாக்கம்) கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. சோதனை சாவடிகள் வழியாகச் செல்லாத வாகனங்களை இடைமறித்து சோதனை செய்ய செயலாக்கப் பிரிவில் சுழற்படைகள் உள்ளன.

தற்போது, மாநிலத்தில் 63 வணிகவரிச் சோதனைச் சாவடிகள் இயங்கி வருகின்றன. அவற்றுள் 31 சோதனைச் சாவடிகள் மாநில எல்லையோரத்தில் உள்ளன.

சோதனைச் சாவடிகளில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்த்து வாகனங்களை விரைவாகத் தணிக்கை செய்ய வேண்டும் என்பதைக் கருத்திற் கொண்டு ஒரு நாளைக்கு 1000 வண்டிகளுக்கு மேல் கடந்து செல்லும் சோதனைச் சாவடிகள் படிப்படியாக இருவழிச் சோதனைச் சாவடிகளாக அமைக்கப்பட்டு வருகின்றன. மொத்தம் உள்ள 63 சோதனைச் சாவடிகளில்



23 பெரிய சோதனைச் சாவடிகளாகும். அவற்றுள் பூவிருந்தவல்லி, ஒசூர், கந்தேகவுண்டன் சாவடி, இராணிப்பேட்டை, இரும்புலியூர், புழல், தோப்பூர் மற்றும் கணியூர் ஆகியவை இருவழிச் சோதனை சாவடிகள் ஆகும்.

லாரிகளில் கொண்டு செல்லப்படும் பொருட்களின் மீது செலுத்தப்பட வேண்டிய வரியினைத் தவிர்க்க சோதனைச் சாவடிகள் வழியாகச் செல்லாமல் வேறு வழிகளில் செல்லும் வாகனங்களை நிறுத்தி சோதனையிட கரூர் மற்றும் மதுரை செயலாக்கப் பிரிவுகளுக்குக் கூடுதலாக இரண்டு சுழற்படைகள் வழங்கப்படும். பொய்யான பட்டியல் தயாரித்து வரி ஏய்ப்பு செய்வதைத் தடை செய்ய சேலம் செயலாக்கப் பிரிவில் ஒரு படை அமைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

சோதனைச் சாவடிகளின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கத்துடன், குறிப்பாக இம் மாநிலத்திற்குள்ளே அமைக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடிகளைக் குறைப்பதற்காக, சோதனைச் சாவடிகளின் செயல்பாடு குறித்து இந்த நடப்பு ஆண்டில் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

தணிக்கைப் பிரிவு

துறைத் தணிக்கைப் பிரிவு, வரிவிதிப்பு மற்றும் வரிவசூல் ஆகியவற்றில் காணப்படும் குறைகளைக் கண்டுபிடிக்கிறது. இதன் மூலம் மாநிலக்கணக்காய்வுத் தலைவரின் தணிக்கைக்கு முன்னதாகவே அவற்றைச் சரிப்படுத்த முடிகிறது. மாநிலத்தில் தற்போது 41 துறைத் தணிக்கைக் குழுக்கள் உள்ளன. இவை சம்பந்தபட்ட துணை ஆணையர்கள் வகுக்கும் செயல்திட்டங்களின் அடிப்படையில் செயல்படுகின்றன. துறைத்தலைமை அலுவலகத்தில் துறைத்தணிக்கைப் பணி மற்றும் மாநில கணக்காய்வுத் தலைவரின் தணிக்கை அறிக்கை மற்றும் அவற்றின் மீதான குறைகளைக் களையும் பணி ஆகியவை வணிகவரி ஆணையரின் கீழ் ஒரு இணை ஆணையரைக் கொண்ட தனிக் குழுவினால் கவனிக்கப்படுகிறது. ஒவ்வொரு காலாண்டிலும் அதற்கு முந்தைய காலாண்டில் செய்யப்பட்ட வரிவிதிப்பு மற்றும் வசூல் பணிகள் துறைத் தணிக்கை குழுவால் தணிக்கைக்கு எடுத்துக்



10919-3.

கொள்ளப்படுகின்றன. துறைத் தணிக்கை குழுவின் அறிக்கை மீதான குறை நிவர்த்தி நடவடிக்கை, குறைகள் முற்றிலுமாக நிவர்த்தி செய்யப்படும் வரையில் மாவட்ட உதவி ஆணையர்களால் கண்காணிக்கப்படுகிறது. துறைத் தணிக்கைக் குழு மற்றும் கணக்காய்வுத் தலைவரால் எழுப்பப்படும் முக்கிய தணிக்கை குறிப்புகள் வணிக வரி ஆணையர் அலுவலகத்திலுள்ள தணிக்கைப் பிரிவால் கண்காணிக்கப்படுகின்றன. துறைத்தணிக்கைப் பிரிவின் செயல்பாட்டினை மேம்படுத்த அவர்களின் பணி தகுந்த கால இடைவெளியில் ஆய்வு செய்யப்படுகிறது. மேலும் நீதி மன்றங்களில் சமீப காலத் தீர்ப்புகள், அவை குறித்த விளக்கங்கள் ஆகியவை சுற்றறிக்கைகளாகவும், செய்தித் தொகுப்புகளாகவும் வணிகவரி ஆணையரால் தணிக்கைக் குழுக்களுக்கு அனுப்பப்படுகின்றன.

## தமிழ்நாடு வரிவிதிப்புச் சிறப்பு நடுவர் மன்றம்

24. தேங்கியுள்ள வரிவிதிப்பு வழக்குகளில் விரைவாக தீர்ப்பு வழங்கவும் அதனால் அரசுக்குச் சேர வேண்டிய ஏராளமான வரித்தொகைகளை வசூல் செய்யவும் ''வரிவிதிப்பு சிறப்பு நடுவர் மன்றம்'' ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதுகாறும் உயர்நீதிமன்றம் விசாரித்து வந்த வழக்குகளை இந்த சிறப்பு நடுவர் மன்றம் விசாரிக்கும். தொடக்கத்தில் தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொதுவிற்பனை வரிச்சட்டம், தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டம், தமிழ்நாடு 1971 ஆம்ஆண்டு விற்பனை வரி (மேல்வரி) சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் வரும் வணிகவரி வழக்குகளை இந்தச் சிறப்பு நடுவர் மன்றம் விசாரிக்கும். இம்மன்றம் 1.1.1996 முதல் இயங்கி வருகிறது.

## கட்டிடங்கள்

25. வணிகவரித் துறை அலுவலங்கள் அனைத்தும் படிப்படியாக அரசுக் கட்டிடங்களில் இயங்க வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். தற்போது அனைத்து துணை ஆணையர் அலுவலகங்களும் (சென்னை மேல்முறையீட்டுத் துணை ஆணையர் அலுவலகம் நீங்கலாக) அரசின் சொந்தக் கட்டிடங்களில்



இயங்குகின்றன. இதுபோன்று 6 உதவி ஆணையர் அலுவலகங்கள் தவிர ஏனைய உதவி ஆணையர் அலுவலகங்கள் அரசுக் கட்டிடங்களில் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. 13 மேல்முறையீட்டு உதவி ஆணையர் அலுவலகங்கள் அரசுக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. எஞ்சிய 7 மேல்முறையீட்டு உதவி ஆணையர் மற்றும் ஒரு துணை ஆணையர் அலுவலகங்கள் சென்னையில் தனியார் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. மற்ற 367 அலுவலகங்களில் 134 அரசுக் கட்டிடங்களிலும் 233 தனியார் கட்டிடங்களிலும் இயங்கி வருகின்றன. இந்த அலுவலகங்களுக்குத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்தி படிப்படியாக அரசு கட்டிடங்கள் கட்டப்படும்.

## வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம்

26. வணிகவரித்துறை அலுவலர்களின் நிர்வாகத் திறமையை மேம்படுத்தி அவர்களின் செயல்திறனை உயர்த்துவதற்காக, வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையம் நிறுவப்பட்டது. 1982 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இப்பயிற்சி நிலையத்தில் வணிகவரித் துறை அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையத்தின் ஆசிரியர் பிரிவுக்கு வணிகவரித் துணை ஆணையர் ஒருவர் தலைவராக உள்ளார். இவருக்கு வணிகவரி உதவி ஆணையர் இருவரும் வணிகவரி அலுவலர் ஒருவரும் உதவி புரிகின்றனர். இப்பயிற்சி நிலையம் உதவி வணிகவரி அலுவலர், துணை வணிகவரி அலுவலர், வணிகவரி அலுவலர் ஆகியோருக்கு ''நினைவுகூர் பயிற்சி'' வகுப்புகளை நடத்துகிறது. இப்பயிற்சி நிலையம் வரி நிர்வாகத்துடன் தொடர்புடைய குறிப்பிட்ட துறைகளில் தனித்திறமை பெற்ற வல்லுநர்களைக் கொண்டு முக்கியத் தலைப்புகளின் கீழ் சிறப்புச் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்கிறது. 1995–96 ஆம் ஆண்டில் துணை வணிகவரி அலுவலர் பணி நிலையில் 70 அலுவலர்களும் உதவி வணிகவரி அலுவலர் பணிநிலையில் 46 அலுவலர்களும் நிலையத்தில் பயிற்சி பெற்றனர்.

கணிப்பொறி மயமாக்குவதற்காக, பயனுள்ள தகவல் விவரங்களைச் சரியான படிவத்தில் அலுவலர்கள் அனுப்புகின்றனரா என்பதை உறுதி செய்ய அவர்களுக்குக் கணிப்பொறி பற்றிய தெளிவும் அனுபவமும் தேவை. எனவே



109/9-4

உதவி ஆணையர் பதவியிலும் அதற்குக் கீழ் பதவியிலும் உள்ள அலுவலர்களுக்குக் கணிப்பொறி அடிப்படைப் பயிற்சி, வணிகவரிப் பணியாளர் பயிற்சி நிலையத்திலேயே அளிக்கப்பட்டு வருகிறது.

## கணிப்பொறி மையம்

27. வணிகவரித்துறையின் கொள்கைகளைத் திறம்பட வடிவமைக்கவும் நிருவாகத் திறமையை மேம்படுத்தவும் தேவையான விவரங்களைச் சேகரித்து, தொகுத்து, முறைப்படுத்தி, தகவல்கள் பெற்றுக் கொள்ள கணிப்பொறி மையம் நிறுவப்பட்டுள்ளது.

1994–95 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம் 1959ன் கீழ் பண்டவாரியான விற்றுமுதல் தொகை மற்றும் வருவாய் ஆகிய தகவல்கள் வணிகரிடமிருந்து பெறப்படும் மாதாந்திர அ1 அறிக்கையின் அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளன. இத்தகவல்கள் வரிவிதிப்பு நடவடிக்கையில் மிகவும் பயன்படுகின்றன.

இதுதவிர, டிசம்பர் 1994, மார்ச் 1995, ஜூன் 1995, செப்டம்பர் 1995 மற்றும் டிசம்பர் 1995 உடன் முடிந்த காலாண்டுகளுக்கு வணிகவரி சோதனைச் சாவடிகளிலிருந்து பெறப்பட்ட தெரிந்தெடுக்கப்பட்ட பொருட்கள் விவரங்கள் தொகுக்கப்பட்டன. இத்தகவல்கள் வரிஏய்ப்பைத் தடுக்க செயலாக்கப் பிரிவினரால் பயன்படுத்தப்படுகின்றன. வணிகர் விவரப்பட்டியல் 1.4.1995 அன்றைய நிலைவரை தயாரிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி, சேலம் மற்றும் வேலூர் (வணிக வரி) துணை ஆணையர்கள் மற்றும் வணிகவரி மாவட்ட உதவி ஆணையர்கள் அலுவலகங்களில் ரூ.10 கோடி மதிப்பீட்டில், கணிப்பொறி அமைப்பு ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு இறுதிக்குள் அனைத்து நிர்வாக அலுவலகங்களுக்கும் கணிப்பொறி வழங்கப்படும். பதிவு செய்யப்பட்ட வணிகர்கள், அதிக வரி செலுத்தும் முதன்மை வணிகர்கள் மாதாந்திரப் படிவத்தில் அளிக்கப்படும் விற்பனைத் தொகை, சோதனைச் சாவடியில்



சேகரிக்கப்படும் பட்டியல்கள், ஆவணங்கள், பல்வேறு பொருட்கள் மூலம் பெறப்பட்ட வருவாய், வணிகவரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம், உயர்நீதி மன்றம் மற்றும் உச்ச நீதிமன்றங்களின் தீர்ப்புகள் போன்றவை கணிப்பம் (Computerised) செய்யப்படும். குறுகிய காலத்தில், முக்கிய விவரங்களைப் பெறவும், சீர்படுத்தவும், வரி ஏய்ப்பு இனங்களைக் கண்டு கொள்ளவும், நிருவாகத்தை மேம்படுத்தவும், இம்முறை துறைக்கு ஏதுவாக இருக்கும். தகுதி வாய்ந்த அலுவலர்களின் பணியினை நன்முறையில் பயன்படுத்திக் கொள்ளவும், நிருவாகத் திறமையினை மேம்படுத்தவும், துறையில் உள்ள அலுவலர்களது குறிப்புகள் மற்றும் செயல்திறன் ஆகியவை கணிப்பம் செய்யப்படும். துணை ஆணையர் நிலையில் இத்துறையினை நிருவகிக்க ஒரு பதவி ஏற்படுத்தப்படும்.

மேற்கூறியவை தவிர வரிவிதிப்பு முறையில் செய்யப்பட்டுள்ள பெருமளவிலான கட்டமைப்பு மாற்றங்களை கருத்திற்கொண்டு துறையின் தேவைகளுக்கு ஏற்றவாறு கணிப்பொறி மற்றும் நிர்வாக தகவல்முறை தொடர்பாக நடப்பாண்டில் விரிவான ஆய்வு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## வணிகர் நல வாரியம்

28. வணிகர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் முதலமைச்சர் தலைமையில் வணிகர் நல வாரியத்தை 1989 ஆம் ஆண்டில் அரசு அமைத்துள்ளது. இவ்வாரியத்தில் அலுவலர்களும், அலுவலர் அல்லாதோரும் உறுப்பினர்களாக உள்ளனர். 31.3.1996 வரை 29118 பேர் ஆயுட்கால உறுப்பினராகச் சேர்ந்துள்ளனர். அவர்கள் மொத்தம் ரூ.35.48 இலட்சம் பதிவுக் கட்டணமாகச் செலுத்தியுள்ளனர். அரசு 1989 ஆம் ஆண்டில் ரூ.2 கோடி மானியம் வழங்கியுள்ளது.

வருமானவரி செலுத்தும் அளவிற்கு வருமானம் இல்லாத அனைத்து உறுப்பினர்களும் வாரியத்தின் கீழ்க் கண்ட உதவிகளைப் பெறலாம் :–

அ) இருதய அறுவை சிகிச்சை மற்றும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை ஆகியவைகளுக்கு மருத்துவச்சான்றின் பேரில் ரூ.25000

ஆ) வாரியத்தின் உறுப்பினராக உள்ள பொருளீட்டும் நபர் இறந்தால் அவரது குடும்பத்திற்கு குடும்ப நல நிதி ரூ.50,000

இ) நலிவுற்ற உறுப்பினர்களின் குழந்தைகள் கல்வியினைத் தொடர்ந்து முடிக்க உதவி

* பாலிடெக்னிக், கலைக்கல்லூரி அதற்குச் சமமான கல்வி (படிப்பு முடியும் வரை) ஆண்டிற்கு ரூ.2000.

* முதுநிலை படிப்பு, தொழிற்கல்வி, அல்லது அதற்குச் சமமான கல்வி (படிப்பு முடியும் வரை) ஆண்டிற்கு ரூ.2000.

ஈ) உடல் ஊனமுற்ற வாரிய உறுப்பினர் அல்லது அவர்களின் குடும்பத்தில் உடல் ஊனமுற்ற ஒருவருக்கு மூன்று சக்கர வண்டி வழங்கப்படும்.

தவிர, வருமான வரி செலுத்தும் வாரிய உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் கீழ்க்கண்ட திட்டங்கள் நடைமுறையில் உள்ளன.

அ. 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்புகளில் முதல் மதிப்பெண் பெறும் மாணவ / மாணவிக்கு பின்வரும் தொகை பரிசாக வழங்கப்படுகிறது.

முதல் மதிப்பெண் பெறும் மாணவ / மாணவிக்கு ரூ.5,000; இரண்டாம் மதிப்பெண் பெறும் மாணவ மாணவிக்கு ரூ.3,000; மூன்றாம் மதிப்பெண் பெறும் மாணவ / மாணவிக்கு ரூ.2,000.

ஆ. விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெறும், உறுப்பினர்களின் மகன்/மகளுக்குப் பின்வரும் தொகை பரிசாக வழங்கப்படுகிறது.



| | |
|---|---|
| சர்வதேச அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு | ரூ.25,000 |
| அகில இந்திய அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு | ரூ.10,000 |
| மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு | ரூ.5,000 |

## குறை தீர்க்கும் பிரிவு

29. வணிகர்கள், தங்கள் குறைகளை எடுத்துரைப்பதற்குரிய அமைப்பாகத் திகழ, 1984 ஆம் ஆண்டில் குறை தீர்க்கும் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. இப்பிரிவு இணை ஆணையரைத் (நிர்வாகம்) தலைவராகவும் மற்றும் இணை ஆணையர் (மக்கள் தொடர்பு), உதவி ஆணையர் (வணிவரி – 2) ஆகியோரை உறுப்பினர்களாவும் கொண்டுள்ளது.

## விற்பனை வரி ஆலோசனைக் குழு

30. விற்பனை வரி நிர்வாகம் குறித்த வணிகர்களின் கருத்தை அறிய உதவும் வகையில் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ள அமைப்பு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்குடன் அரசு மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் வணிகவரி ஆலோசனைக் குழுக்களை அமைத்துள்ளது. மாவட்ட ஆலோசனைக் குழுக்களுக்கு, அந்தந்த மாவட்ட ஆட்சியர்களே தலைவர்களாவர். இக்குழுக்களில் அலுவலர்கள் மற்றும் வாணிபக் கழகங்கள், வர்த்தகச் சங்கங்கள், கூட்டுறவு, மற்றும் வேளாண்மை நிறுவனங்கள் ஆகியவற்றின் அலுவலர் அல்லாத பிரதிநிதிகள் உறுப்பினர்களாக உள்ளனர். வணிகவரிச் சட்டங்களினால் வர்த்தகத் துறையில் எழும் பல்வேறு வணிகப் பிரச்சனைகள், விற்பனை வரிச் சட்டங்கள், விதிகள் ஆகியவற்றை நிருவகிப்பது தொடர்பான பிரச்சனைகளை இக்குழு பரிசீலிக்கிறது. நிருவாகத்தை மேம்படுத்தவும். வணிகர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்கவும்,

இக்குழுக்களின் தீர்மானங்களும் அவை தெரிவிக்கின்ற ஆலோசனைகளும் கருத்திற் கொள்ளப்படுகின்றன.

## மேல்வரி மற்றும் கேளிக்கை வரி வசூலில் இருந்து உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியம் அளித்தல்

31. உள்ளாட்சி மன்றங்களின் வருவாய் ஆதாரங்களைப் பெருக்கும் பொருட்டு, சென்னை மாநகராட்சி பகுதியில் வசூலிக்கப்படும் விற்பனை வரி மீதான மேல் வரியின் மொத்த வசூலில் 50 சதவீதத்தொகை சென்னை மாநகராட்சிக்கு மானியமாக ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது. அது போன்றே மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகள் மற்றும் சிறப்பு நிலை நகராட்சிகள் பிற நகராட்சிகள், நகரப் பஞ்சாயத்துகள் ஆகியவைகளில் வசூலிக்கப்படும் விற்பனை வரியின் மீதான மேல் வரியின் மொத்த வசூலில் 20 சதவீதம் அந்தந்த உள்ளாட்சி நிறுவனங்களுக்கு மக்கட்தொகை அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் மானியமாக வழங்கப்படுகிறது.

அவ்வாறே கேளிக்கை வரி வசூலில் மாநகராட்சிகள் மற்றும் சிறப்பு நிலை நகராட்சிகளுக்கு 70 சதவீதமும், தேர்வுநிலை நகராட்சிகள், முதல் நிலை நகராட்சிகள் மற்றும் நகரப் பஞ்சாயத்துகளுக்கு 65 சதவீதமும் , பிற உள்ளாட்சி மன்றங்களுக்கு 60 சதவீதமும் ஒப்படைக்கப்படுகின்றன.

## காலம் தள்ளி வரி செலுத்தும் சலுகை உட்பட தொழிலகங்களுக்கான விற்பனை வரிச் சலுகைகள்

32. மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக மிகப் பின்தங்கிய மாவட்டங்களில் தொடங்கப்படும் புதிய தொழிலகங்கள் செலுத்த வேண்டிய வரியைக் கைவிட அரசு அனுமதிக்கிறது. அத்துடன் புதிய தொழில்கள், தொழிலக விரிவாக்கங்கள், நலிந்துபோன தொழிலகங்கள் மற்றும் நூற்பு ஆலைகள் ஆகியவை செலுத்த வேண்டிய வரிகளை, காலம் தள்ளி வட்டியின்றி செலுத்தும் சலுகையினையும் அரசு வழங்கிவருகிறது. 1995–96 ஆம் ஆண்டில்



அவ்வகையில் தொழிலகங்களுக்கு ரூ.191.31 கோடி வரியினைக் காலம் தள்ளிச் செலுத்தும் சலுகையாக, வழங்கப்பட்டுள்ளது.

## முறைப்படுத்துதலும் வரி சீரமைப்பும்

33. தொழில் முனைவோர் மற்றும் வணிகர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, வரி விதிப்பு முறை மற்றும் வரி விதிப்பு தொடர்பான படிவங்களைச் சீரமைக்கவும், எளிமைப்படுத்தவும் இத்துறை முயற்சி மேற்கொண்டுள்ளது. நீதி மன்றங்களின் ஆணைகள், அரசின் வரி விதிப்புக் கொள்கை மற்றும் பிற மாநிலங்களில் பின்பற்றப்படும் வழிவகைகளைக் கருத்திற்கொண்டு வணிகர்கள் மற்றும் வணிகர் சங்கங்களின் கோரிக்கைகள் பரிவுடன் பரிசீலிக்கப்படும். வெளிப்படையான வரி விதிப்பு நிர்வாகம் நடப்பதுடன், வணிகர்களின் நியாயமான குறைகள் உடனுக்குடன் தீர்க்கப்படும். தொடர்ச்சியாக பெருமளவில் வரி ஏய்ப்புச் செய்யும் நிறுவனங்களும், வரி ஏய்ப்புக்குள்ளாகும் இனங்களும் கண்டுபிடிக்கப்பட்டு திடீர் ஆய்வுகள் மூலமும், சட்டத்திலுள்ள குறைகள் தீர்க்கப்படுவதன் மூலமும் வரி ஏய்ப்புகள் தடுக்கப்படும். இடைவிடா முயற்சிகள் மேற்கொண்டு, நிர்வாகத்தைச் சீர்செய்து, வரி விதிப்புச் சட்டங்களை நன்கு செயற்படுத்தி வருவாயைப் பெருக்க வழிவகை காணப்படும்.

மு. கருணாநிதி
முதலமைச்சர்